| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.எஸ்.பானுமதி, எம்.ஏ.,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),<br>ஊராட்சி ஒன்றியம் காட்பாடி. | திரு.M.S.சுதாகர்,<br>எண்.10, அவ்வையார் நகர்,<br>இரண்டாவது தெரு, தொரப்பாடி<br>வேலூர்-632 002. |

ந.க.ஆ2/540/2019, நாள்:09.08.2019.

பொருள் :- அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் - வேலூர் மாவட்டம் - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - சேனூர் ஊராட்சி சர்வே எண்கள்:622/1,2எ, 631/5எ, 5பி மற்றும் 623/1(ப)-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனை எண்:1,2,5,6,7,8,9,10,11,12,15,16,17,18,21,22,28,29,30,31,32,35,36,38,39-ல் வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தக் கோருதல் - சார்பு.

பார்வை :- 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3382/2018/வேம3, நாள்: .02.2019.
2.அரசாணை எண்.29 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள்:05.02.2019.

<><><><><>

பார்வையில் காணும் கடிதத்தில் வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் சேனூர் ஊராட்சி சர்வே எண்கள்: 622/1,2எ, 631/5எ, 5பி மற்றும் 623/1(ப)-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனை எண்:1,2,5,6,7,8,9,10,11,12,15,16,17,18,21,22,28,29,30,31, 32,35,36,38,39-ல் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1ச.மீ ரு.33/-வீதம் அரசுக் கணக்கிலும், வளர்ச்சிக்கட்டணம் ரு.1ச.மீ ரு25/-வீதம் ஊராட்சி கணக்கிலும் செலுத்துமாறு பார்வையில் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ரு.99,000/-ஐ கீழ்கண்ட அரசுக்கணக்கிலும், வளர்ச்சிக் கட்டணம் ரு.75000/- ஊராட்சியில் செலுத்திவிட்டு இவ்வலுவலகத்தில் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ரு.99,000/-

அரசுத்தலைப்பு

0217- Urban Development
60-Other Urban Development Scheme
800-Other Receipts
AT-Receipt Under Regularisation of Unapproved Layouts & Plots-DTCP
27-Non Taxation Fees
30-Regularisation
(DP Code-0217-60-800-AT2730)

வளர்ச்சிக்கட்டணம் ரு.75,000/- சேனூர் கிராம ஊராட்சி கணக்கு எண்:1-ல் செலுத்தப்படவேண்டும்.

மேற்படி கட்டணங்களை உரிய கணக்கில் செலுத்திய பின் வரன்முறைப்படுத்தி மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
காட்பாடி.

நகல்
ஊராட்சி செயலர், சேனூர் ஊராட்சி, காட்பாடி.

அனுப்புநர்

திருமதி.எஸ்.பானுமதி, எம்,ஏ.,
தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி
அலுவலர்(கி.ஊ), சேனூர் மற்றும் T.K.புரம்
ஊராட்சி,ஊராட்சி ஒன்றியம் காட்பாடி.

பெறுநர்

சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
காட்பாடி.

ந.க.ஆ2/540/2019, நாள்:25.06.2019

அய்யா,

பொருள் : மனை பத்திரம் - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - சேனூர் மற்றும் T.K.புரம் ஊராட்சி சர்வே எண்கள்: 622/1,2எ, 631/5எ,5பி, 623/1(ப),40/1,2 மற்றும் 40/3-ல் 2.50½ ஏக்கர் (10137 சதுர மீட்டர்) பரப்பளவில் உள்ள மனைகள் - பூங்கா பகுதி மற்றும் சாலை பகுதி பத்தரப்பதிவு செய்து கொடுக்க கோருதல் - சார்பு.

பார்வை : துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு, வேலூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.3382/2018/வேம3, நாள்: .02.2019.

**********

பார்வையில் காணும் கடிதத்தின் படி காட்பாடி ஊராட்சி ஒன்றியம், சேனூர் மற்றும் T.K.புரம் ஊராட்சி கிராம சர்வே எண். 622/1,2எ, 631/5எ,5பி, 623/1(ப),40/1,2 மற்றும் 40/3-ல் 2.50½ ஏக்கர் (10137 சதுர மீட்டர்) பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பத்திர பதிவினை செய்ய கையொப்பமிட்டுள்ள அலுவலராகிய நான் நேரில் வரவேண்டும் என்ற விதியில் இருந்து இந்திய பதிவுச்சட்ட பிரிவு 88(1)-ன் கீழ் எனக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குரிய பதிவுக்கட்டணத்தை பெற்று கொண்டு இவ்விடங்களை தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேனூர் மு T.K.புரம் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம் என்ற பெயருக்கு தானபத்திரம் செய்ய வேணுமாய் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

25/6/19

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
சேனூர் மற்றும் T.K.புரம் ஊராட்சி,
காட்பாடி.

## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)

வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : **திருமதி.கே.வி.ரேகா,டி.சி.இ.,**

**ந.க.எண்.3382/2018/வேம3,** **நாள்: 20.02.2019**

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – **2.50½** ஏக்கர் **(10137.00** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. மனுதாரர் திரு. M.S. சுதாகர் அவர்களின் விண்ணப்பம் நாள்: 10.05.2018.<br>5. அரசாணை எண் : 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 05.02.2019.<br>******** |

**உத்தரவு :**

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், சேனூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள் : 622/ 1,2எ, 631/5எ, 5பி (ம) 623/1(ப) மற்றும் உண்ணாமலை சமுத்திரம் கிராமம், சர்வே எண்கள்: 40/1, 2 (ம) 40/3–ல் **2.50½** ஏக்கர் **(10137.00** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ (வே.ம.) வரன்முறைபடுத்துதல் எண்: 108(R)/2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவுன் மொத்த பரப்பு | : | **10137.00** ச. மீ **(அ) 109118.00** ச.அடி **(அ) 2.50½** ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | **71** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | **13** |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 3, 4, 13, 14, 19, 20, 23-27, 37, 69 |

விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு : 16371.00 ச.அடி
விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 58
விற்கப்படாத மனைகளின் எண்கள் : 1, 2, 5-12, 15-18, 21, 22, 28-36, 38-68, 70, 71
விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 69295.00 ச.அடி
திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 7040.00 ச.அடி – 10.16%
(மனை எண்: 33, 34, 64-68 )

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0248039/2017, நாள். 04.05.2018–ன் படி விற்கப்படாத 57 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.28,500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

**1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25/– (ரூபாய் இருபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து

மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

04.11.2018–க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மானகளுக்கு பார்வை 5–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

பார்வை 1, 2 மற்றும் 5–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (ii) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

20/2/19

**இணைப்பு:**

மனைப்பிரிவு வரைபடம் – 2.

**பெறுநர்,**

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
சேனூர் ஊராட்சி,
காட்பாடி ஊராட்சி ஒன்றியம்,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

**நகல்:**

| | |
|---|---|
| 1. மனுதாரர்.<br>Mr. M. S. Sudhakar,<br>No.10, Avvaiyar Nagar,<br>Second Street, Thorapadi,<br>Vellore – 632 002. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |

| | |
|---|---|
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர்,<br>காட்பாடி வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4. சார்பதிவாளர்,<br>காட்பாடி சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணா சாலை,<br>சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |
| 6. கோப்பு<br><br>7. வைப்பறை | |